**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,</u>**
**<u>காட்டுமன்னார்கோயில்.</u>**

**சி.சி. 94/2023**

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா. 7 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பாஸ்கரன் | **ஊர்** | ஷண்டன் |
| தந்தை **பெயர்** | வைத்தியலிங்கம் | **வட்டம்** | **காட்டுமன்னார்கோயில்** |
| **வயது** | **61** | **மாவட்டம்** | கடலூர் |
| **தொழில்** | | | |
| **காவல் நிலையம்** | | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 10.07.2025 நாளாகிய இன்று திரு. M.Sam Eugine Jebakumar, B.E.,B.L., காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்**

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் ஷண்டன் கிராமத்தில் வசித்து வருகிறேன். சாட்சி முருகன் என்பவரை தெரியும். எப்போதும் செல்வது போல் வடவாற்றாங்கரைக்கு சென்றேன். அங்கு பள்ளியில் லேப்டேப் மற்றும் டேப் ஆகியவை திருடுப்போய்விட்டதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிகளை தெரியாது. அவர்களை நான் பார்த்தது இல்லை. என்னிடன் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரப்பட்டது. பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது. )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் நானும் முருகன் என்பவரும் 03.05.2023ம் தேதி மாலை 04.15 மணிக்கு ஒரு விசாரணைக்காக காட்டுமன்னார்கோயில் காவல்நிலைத்திற்கு வந்ததாகவும் அப்போது எங்கள் ஊர் பள்ளியில் லேப்டேப் மற்றும் டேப் திருடுபோனது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்து மேற்கண்ட பொருட்களை

திருடியதாக ஒத்துக்கொண்ட எதிரிகள் மனோ (எ) மனவாளன் மற்றும் விநாயகன் என்பவர்களை நீதிமன்றத்தில் இருந்து போலீசார் காவலில் அழைத்து வந்திருப்பதாக எங்களிடம் சொல்லி அவர்கள் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளாக இருக்க கேட்டுக்கொண்டார்கள் என்றும் எங்கள் முன்னிலையில் 04.45 மணிக்கு மனோ(எ) மனவாளன் த.பெ ரவிகுமார் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்தார் என்றும் மேலும் எங்கள் முன்னிலையில் அவரது வீட்டின் பின்புரம் உள்ள சமையல் கொட்டா லாப்டில் மறைத்து வைத்திருந்த 2 லேப்டேப், 1 டேப் ஆகியவற்றை எடுத்துக் கொடுத்தார் என்றும் அவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் முருகனும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பள்ளியில் திருடு போன பொருட்கள் கிடைத்துவிட்டதா என்பது குறித்தோ அதை யார் திருடினார்கள் என்பது குறித்தும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு திருடுப்போன பொருட்களை என் முன்னிலையில் யாரிடமிருந்தும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக என்னிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்டுமன்னார்கோயில்.</u>**

**சி.சி. 94/2023**

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை

அ.சா. 8 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | முருகன் | **ஊர்** | ஷண்டன் |
| தந்தை **பெயர்** | ராஜதுரை | **வட்டம்** | **காட்டுமன்னார்கோயில்** |
| **வயது** | **46** | **மாவட்டம்** | கடலூர் |
| **தொழில்** | | | |
| **காவல் நிலையம்** | | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 10.07.2025 நாளாகிய இன்று திரு. M.Sam Eugine Jebakumar, B.E.,B.L., காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்**

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் ஷண்டன் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.7 பாஸ்கரை தெரியும். எப்போதும் செல்வது போல் வடவாற்றாங்கரைக்கு சென்றேன். அங்கு பள்ளியில் லேப்டேப் மற்றும் டேப் ஆகியவை திருடுப்போய்விட்டதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிகளை தெரியாது. அவர்களை நான் பார்த்தது இல்லை. என்னிடன் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரப்பட்டது. பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது. )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் நானும் அ.சா.7 என்பவரும் 03.05.2023ம் தேதி மாலை 04.15 மணிக்கு ஒரு விசாரணைக்காக காட்டுமன்னார்கோயில் காவல்நிலைத்திற்கு வந்ததாகவும் அப்போது எங்கள் ஊர் பள்ளியில் லேப்டேப் மற்றும் டேப் திருடுபோனது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்து மேற்கண்ட பொருட்களை திருடியதாக

ஒத்துக்கொண்ட எதிரிகள் மனோ (எ) மனவாளன் மற்றும் விநாயகன் என்பவர்களை நீதிமன்றத்தில் இருந்து போலீசார் காவலில் அழைத்து வந்திருப்பதாக எங்களிடம் சொல்லி அவர்கள் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளாக இருக்க கேட்டுக்கொண்டார்கள் என்றும் எங்கள் முன்னிலையில் 04.45 மணிக்கு மனோ(எ) மனவாளன் த.பெ ரவிகுமார் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்தார் என்றும் மேலும் எங்கள் முன்னிலையில் அவரது வீட்டின் பின்புரம் உள்ள சமையல் கொட்டா லாப்டில் மறைத்து வைத்திருந்த 2 லேப்டேப், 1 டேப் ஆகியவற்றை எடுத்துக் கொடுத்தார் என்றும் அவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் பாஸ்கரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பள்ளியில் திருடு போன பொருட்கள் கிடைத்துவிட்டதா என்பது குறித்தோ அதை யார் திருடினார்கள் என்பது குறித்தும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு திருடுப்போன பொருட்களை என் முன்னிலையில் யாரிடமிருந்தும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக என்னிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.